இஃது

சர்ச்சனர் பலர் இச்சையைக் கருதி

திருநெல்வேலி, நாடக ஆசிரியர்,

த. லக்ஷ்மணன் சேர்வை

அவர்களால் இயற்றிய

கமால் பீடியின் குணாதிசய

கதம்பப் பாமாலை

என்னும்

புகழினிய பாடல்கள்.

இதனை

திருமங்கை நகரமென்னும்,

பேட்டை நகர் கமால்பீடி, புரோப்ரைட்டர்.

A. முகம்மது ராவுத்தர் அவர்களால்,

... டவுண், மேலரதவீதி,

...ச்சுக்கூடத்தில்,

... பெற்றது.

...9.

MADRAS

6-, 158

N29

176552

கருத்துரை.

இவை,

பாரத கண்டத்திலோர்பாக தெக்ஷிண பீடத்திலகமாய்த் அதிக[illegible]பெறும் திருநெல்லைமாநகரின்கண் வசித்துள்ள அநேக பிரபுக்களின் விருப்பத்தைக்கருதி, திருமங்கை நகரமென்னும் பேட்டையில் பூர்வீக நவாப் வாலாஜா சாஹேப் அவர்கள் திரு பள்ளிவாசல் தர்மகர்த்தராகவும், வர்த்தகராகவும் இஸ்லாமியக் கொழுந்தாயும் இலங்கும் மகாகனம் A. முகம்மது ராவுத்தர் அவர்களின் கீர்த்திப்பிரதாபங்களைத் தழுவியும், அன்னவரால் தயாரித்து விற்பனை செய்துவரும் **கமால்பீடியின்** குணாதிசய வைபவங்களைப் பற்றியும் எனது மனமார்ந்த அன்பின் பெருக்கினால் வியந்து புகழ்ந்து பாடிய '**கதம்பப் பாமாலை**' இதுவே யாகும். இத்தகைய பாடல்களுக்கு கதம்பம் என்று பெயர் சூட்டியதற்கு காரணம் என்னவெனில் கதம்ப மென்பது கந்த மிகுந்த அநேகவித மலர்களை ஒரேபத்தியில் தொடுத்து கட்டி விளங்குவதற்கேயாம். ஆகவே அதன்பான்மை ஒத்து கமால் பீடியின் குணம் என்னும் ஒரே கருத்திற்கு பல பல வர்ண மெட்டுகளைக்கொண்டு எனது சிற்றறிவிற்கெட்டிய மட்டிலும், நால்வகையாரும் எழிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படையான அர்த்தங்களைப் பொருத்திப் பாடியுள்ளேன் இதனில் சொற்பிழை பொருட்பிழை காணப்படினும் அன்னம் பாலை அருந்துமாப்போல் இதனை நன்னயமாக்குவது பெரியோர்களின் கடமையே யாகும். இங்ஙனம்.

த. லட்சுமணன் சேர்வை,

நாடக ஆசிரியன்.

காஜி முஸ்தபா கமால்பாக்ஷா.

ரிஜிஸ்டர் நிர். 586.

கமால் பீடி தொழிற்சாலை புரோப்ரைட்டர்:

A· முகம்மது இராவுத்தர்.

குகமயம்.

(மலரணைமேல் எனையணைய வருவாயே சுவாமி)

1. ஜெகம்புகழும் காஜிகமால்
ட்ரேட்டு மார்க்குப்பீடி—பாக்ஷா
திருவுருவம் ரிஜிஸ்டரிலே
செய்திலங்கக் கூடி.
சுகமான காரங்குணம்
சோபிதமே தாக்கும்
சுறுசுறுப்புண்டாக்கும், உடல்
சோம்பலதை நீக்கும்—மனத்
துயரமதைப் போக்கும்—அதி
சுத்தராம் முகம்மது ராவுத்தரையே
கார்க்கும்—இந்த (ஜெகம்)

2. கலியுலக மிதிலுயர்ந்த
காஜிக்கமால் பீடி—ஒரு
காசுக்குள்ளே இதன் சுகத்தை
கண்டனர் கொண்டாடி.
மலிவானதும் குணத்தில்
மதிப்படங்கா ஜோடி
மகிழுமணங்கூடி—கன

வான்களூறவாடி—பல
மானபுகழ்தேடி—இதை
வர்த்தகஞ் செய்யுத்தமர்க்கு
லாபங் கோடாகோடி. (கலி)

(காக்ஷி கண்காக்ஷியே)

1. காஜி கமால்பீடி
காக்ஷிப் பாமலரிதழ்சூடி (காஜி)

2. காவுத்தமரான முகம்மது
ராவுத்தர்தன் வர்த்தகம் செய்வது (காஜி)

3. காரங்குணமண சாரம் பொருந்திய (காஜி)

4. கச்சிதக்கையாளர் சுத்து
அச்சில்வைத் தெடுத்த முத்து (காஜி)

5. கனம் பிரபலர் நற்புகழனு
தினந்தருகப் பெருமுயர்தர (காஜி)

சரணம்.

6. ஊஜிதமடைந்த தென்னும்
ஓதிடும் கமால் பீடி
ஒற்றுமை சேரிந்தியர்கள்
முற்றுமிதைக் கொண்டாடி

ஓங்கிட பர்மா சிலோன் மேநாட்டில்—அன்பர்
ஊக்கமாய் உபயோகிக்கும் ரேட்டில்
பாங்குயர் திருநெல்வேலி மார்ட்டில்—பிளஷர்
பாடிமோட்டார் காரில் சப்ளை டேட்டில்
பரிமளிக்கும் பீடி
பதில்வெட்டில்லா ஜோடி
வரும் வழியில் கூடி
மகிழ்ந்து நிற்பார் கோடாகோடி. (காஜீ)

(நாகூரா-மீரா)

1. தென்னிந்தியா மிக்கச் செல்வந்தர்காமிக்க
க்ஷேமக்கமால் பீடியே—காஜிமுஸ்தபா
நாமத்தை முன்சூடியே.

2. முன்னஞ் சுவைகாட்டும் பின்னந்தனை ஓட்டும்
என்னும் கமால்பீடியே—இதற்கிணைவே
றில்லை என்பார் கூடியே

3. கண்ணுங்கருத்தும் கமால்பீடி மேல் வைத்தால்
காணச்சுகங்கோடியே—வர்த்தகரெல்லாம்
வேண லாபந்தேடியே

4. மின்னற்ஜொலிப்போ வென்றெண்ணக்கடை வீதி
மேவும் கமால்பீடியே—வாங்குகிறவர்
யாவும் புகழ் பாடியே.

5. கட்டானபண்டல்மேல் மெட்டாய்க் கமால்பாக்ஷா
கண்டுகொள்ள ரிஜிஸ்டர்—செய்துவிளங்கும்
காரணம் பார்ப்பாரிஷ்டர்.

6. எட்டாள தேசங்கொண்டாடும் திருப்பேட்டை
ஏகன் வாலாஜாப்பள்ளி—தருமகர்த்தா
யோகன் முகமத்புள்ளி.

7. செட்டாய் முகம்மது ராவுத்தர் செய்யும்
ஜெயமாம் கமால்பீடியே—திருநெல்வேலி
ஜில்லாவெங்கும் நீடியே. (தென்)

(ஆண்டிப் பண்டாரம்)

1. காஜி, கமால்பீடி. காரங்குணமுங்கூடி
முஸ்தபா— (காஜி)

2. பூஜித வாலாஜாப்பள்ளி
போற்றிடும் தர்மகர்த்தா
ஊஜிதமுகம்மது ரா—வுத்தர் தினம்
வர்த்தகம் செய் (காஜி)

3. நாட்டில் சிறந்ததுவும் நன்னயமிருந்ததுவும்
மேட்டிமையானதுவும்
மிகுந்த புகை மணந்திகழும் (காஜீ)

4. காமில் பீடியை வதைத்து
கக்ஷியில் ஜெயமெடுத்து
பூமியில் தன் புகழ்தொடுத்து
புதிய சேட்டுக்கொடி பிடித்தது (காஜீ)

5. மோட்டாரிலே தினமும்
முந்தவரும் கமால்பீடி
கேட்டவர்க்குப் பாதிபாதி
கீர்த்திபெற பூர்த்திசெய்யும் (காஜீ)

6. கொண்டாடும் வர்த்தகர்கள்
கோடான கோடியுண்டு
கண்டானந்தித்த சுகம்
கடிதமூலம் எழுதித் தரும் (காஜீ)

(பாண்டியன் ஈன்ற மீனாக்ஷி)

1. பாங்குயர்வாம் கமால் பீடி,
பரிமணம்,
சூழ்ந்ததிசைக்கூடி (பாங்)

வாங்குவர் யாவும் புகழ்பாடி
வருகிறார்,
மகிமைபெற நீடி (பாங்)

(தொகையறு)

2. தாங்குநற் காஜிமுஸ்தபா, கமால்பாக்ஷா
தன்னுருவமதை ரிஜிஸ்டர்,
ஓங்கிடச்செய்திந்த மண்ணுலகில் பீடிக்கு
உயர்தரமுற்ற இஷ்டர்

3. பேட்டை வாலாஜாப் பள்ளியது
பெருந்தர்மகர்த்தராகப்போது
நாட்டையே போற்று முகம்மது ராவுத்தர்
லாவண்யமீது (பாங்)

(அற்புதப் புதுமைகளாகிய ரப்பர்தோட்டம்)

1. கந்தமிகுந்து கமழ்ந்த கமால்
முஸ்தபா பீடி, கமால்
முஸ்தபா பீடி—நல்ல
காரங்குணமண சாரந்தனிலுயர்
கச்சிதங்கூடி.

சந்ததமுந்திரு மங்கையமாநகர்
தண்ணியந்தேடி—மிக்க
கண்ணியந்தேடி
சத்திய வுத்தமரான முகம்மது
ராவுத்தர் நீடி—செய்யும்
சர்ச்சனர் மெச்சியபீடி—அதி
லக்ஷணமாக முன்னாடி—தினம்
விற்பனையாவது கோடி—புகழ்
விகசிதமாய்க் கொண்டாடி—
வேணவே பீடியிடம், டம், டம். டம். (கந்த)

2. சிந்தைமகிழ்ந்து திருப்பணியாளர்கள்
செய்தபீடி—தினம்
செய்த பீடி—
செம்மையிலங்கிடவந்தது எங்கினும்
க்ஷேமம் சூடி.
செந்திருநெல்லை சிறந்தகமால்
முஸ்தபா பீடி—கமால்
முஸ்தபாபீடி—உயர்
சித்திரமுற்று ரிஜிஸ்டரில் செய்து
திகழ்ந்ததுமிப்பீடி—காண

தினம் வரும் மோட்டார்காக்ஷி—அதில்
ஜெயக்கொடி கட்டியமாக்ஷி
மனம்போல்பீடி அத்தாக்ஷி—அதை
வாங்கியே செல்லுவர் சாக்ஷி
வர்த்தகர் முகம்மதிடம் டம். டம். டம். (சிங்)

(வனசாக்ஷி-பகவதி குணநிதி.)

1. கமால் பீடி,
கனமுடி, குணங்குடி (கமா)
நமதுடைய இந்தியர் நாடிடும் பீடி
ரசிதமிதில் விளங்கவசிகரஞ்சூடி
சமமிதற்கில்லை என்றுரைப்பவர்கோடி
சந்தம் பாடி—கந்தம்கூடி
வந்துதேடி—தந்தகரீடி (கமா)

2. நாட்டுக்கடை வர்த்தகர் நற்பிரீதிகோஷ்டம்
நண்ணியலாபமிதனிற் பண்ணினரேதேஷ்டம்
கேட்டுக் கிடைப்பதற்கில்லாதவரின் தேட்டம்
கீர்த்திநாட்டம்—கிருபைச்சேட்டம்
நேர்த்திக்கூட்டம், நிதக்கொண்டாட்டம் (கமா)

3. ஆதிவாலாஜாப்பள்ளி அன்புறையும் சுத்தர்
அத்தனருள் பெற்றிட முகம்மது ராவுத்தர்
நீதிதழுவித் தொழநின்ற தர்மகர்த்தர்
நேசபக்தர்—நிகழும் தத்தர்
பேசச்சித்தர்—பெருமையுற்ற (கமா)

(எஜிட்டாதர்ப்புதேரி)

1. தெவிட்டாக் கமால்பீடி
சீரான காரங்குணங்கூடி (தெ)

2. சிந்தைக்கினிதாக்கும்—புகை
தேகத் திடமாக்கும்
மந்தபுத்தி நீக்கும்
மா மோகந்தந்து மேலாக்கும்
கமால்பீடி— (தெ)

3. வாலிபர் கொண்டாடி—தினம்
வாங்குவார்கள் தேடி
பாலிதமே நாடி
பா மாலை பலவும் சூடி
கமால்பீடி— (தெ)

4. அகமதுாக்க வெள்ளி
ஆதிவாலாஜாப்பள்ளி
முகம்மது ராவுத்தர்
முத்தா னந்த—தர்மகர்த்தர்
கமால்பீடி— (தெ)

(கதர்க்கப்பல்கோடி காணுதே)

1. கமால்பீடிக்கொடி காணுது
காஜிமுஸ்தபா கமால்பாஷா
உருவங்கொண்டு (கமா)

2. சமமிதற்கில்லை என்று
சாதித்திடமுன்வந்து
நமதிந்தியாவில் எல்லா
நாடெங்கினும் சிறந்து
நலமாக—புகழ்—பலமாக
நற்குண மணந்திகழ்ந்து
விற்பனையிலே மிகுந்து (கமா)

3. சர்ச்சனராலே தந்த
சர்ட்டிபைக் கொண்டதென்று

கர்ச்சனைசெய்து நின்று
காமில்பீடியைக் கொன்று
கனமாக—ஊர்—வலமாக
காக்ஷிமோட்டாரில் ஜெய
சாக்ஷிகாணவே இன்று— (கமா)

4. மகிபன் வாலாஜாப் பேரே
மார்க்கப் பள்ளியின் சீரே
முகம்மது ராவுத்தரே
முதல் தர்மகர்த்தர் பாரே
முகராசி—உற்ற—சுகவாசி
மோகக் கமால் பீடியின்
யோகவர்த்தகர் நேரே— (கமா)

(முருகனிடம் என்முறை சொல்வாய் கிளியே)

1. முஸ்தபாகமால் பீடிவாங்கியேவா
நண்பா— (முஸ்)

2. மோக - தாக - மாக - லானேன்
ஆகையினாலே நீ சென்று
வேகமதாகவே இன்று (முஸ்)

3. முதிர்ந்த பழமணந்திகழும்
அதன்ப்ரபல குணம்புகழும் (முஸ்)

4. முத்துப்போல சுருட்டிய
சுத்துச் சாலமிரட்டிய (முஸ்)

5. மூடமதியாலே பலபீடிகளை
நாடலான கேடதனை ஓடவே செய் (முஸ்)

சரணம்.

6. வஸ்துவளர் திருமங்கை மாநாட்டிலே
வள்ளல் வாலாஜாப்பள்ளி இன்பத்தேட்டிலே
விர்த்தியாகத் தர்மகர்த்த ரேட்டிலே
மிகஉத்தமரான முகம்-மது ராவுத்தர்சேட்டிலே
விரும்பி நான் தந்த சலாம்
பெறும்படி சொல்லியே குலாம் (முஸ்)

(கண்ணபிரான் என்னுமொரு காசினி அவதாரம்)

1. பொன்னெனவே மின்னுங்கமால்
புதிய சேட்டுப்பீடி—அக்கூள்
புகையிலையைக்கூடி—மெத்த
புகழதனைத்தேடி—ஒரு
போதுமழியாத ஜெயம்
புனிதரால் கொண்டாடி

2. மண்ணுலகில் காஜிக்கமால்
வதனமே ரிஜிஸ்டர்—பார்த்து
வாங்கிடுவாரிஷ்டர்—எங்கும்
மதித்திடும் சிரேஷ்டர்—தினம்
வாயபிஷேகம் செய்கிறார்
வர்த்தகம்செய் மிஸ்டர்.

3. சொன்னமயமான கமால்
பீடிசுற்றும் நேர்த்தி—அதை
சுத்தமாய்த் திருத்தி—மிக
அற்புதப்படுத்தி—தினம்
சோதனையிலே நயமாய்த்
துதிபெற்றதின் கீர்த்தி

4. மன்னவர்கள் போற்றுந்திரு
மங்கை நாட்டின் பக்தர்—வா
லாஜாப்பள்ளிச் சுத்தர்—மன
மகிழும் தர்மகர்த்தர்—அருள்
மாகனம்பொருந்தும் வ
முகம்மது ராவுத்தர்.

(கார்க்கும் தன்மையில்லையா)
இங்கிலீஷ் நோட்.

1. மாம்பழம் கமால்பீடியே
மணங்கூடியே
குணந்தேடியே—தினம்
வாங்குவார்கள் கொண்டாடியே
நாம்பழகும்கொள்கை மேம்படியே
நாள்வழிபோற்றக் கமால் பீடியே
நலமே—தருக—பலமே—பெருக
ராசியமுகம்மது ராவுத்தரை நாடியே
மணங்கூடியே
குணந்தேடியே—தினம்
வாங்குவார்கள் கொண்டாடியே

2. அன்றுடம் மோட்டாரில்
கொண்டுசெல்ல—பீடி
தண்டோரா நோட்டீசில்
கண்டு கொள்ள
அகமே - மகிழ - புகமே திகழ
ஆடவர்புகழ் முகம்மது ராவுத்தர்சொல்ல
மணங்கூடியே
குணந்தேடியே—தினம்
வாங்குவார்கள் கொண்டாடியே

(அந்த மிகுந்த முகுந்தன் மருகனே வாவா)

1. கந்தமிகுந்து மணந்திகழ்ந்த
கமால்பீடி அதை நாடி
வாங்கிவாடி – போடி (கந்த)

காரமுங்குண சாரசந்தின
தாரணைக் கமால்பீடி
அதை நாடி
வாங்கி வாடி—போடி (கந்த)

அந்தமது காட்டுமானந்த வடிவந்தீட்டும்
அக்கூள் புகையிலையின் கூட்டும்
சொந்தமுடன் காஜிமுஸ்தபா
கமால்பாக்ஷா
சொரூப ரிஜிஸ்டரிலே நாட்டும்
சுகதர்மகர்த்தரான
முகம்மது ராவுத்தர் காணக்கூடி
கமால்பீடி
வாங்கிவாடி—போடி (கந்த)

(காலக்கோடுமையால் நாளுக்குநாளாககலி பெருத்தது)

1. நற்குணமுற்ற கமால்பீடி வைபவம்
நாடுபுகழுங் கொண்டாட்டம்
விற்பனையுள்ளதும் மிக்க உயர்ந்ததும்
வேணவரன்புகொள் நாட்டம். (நற்குண)

2. வர்க்கத்துடன் வரும் மதனுருவந்தரும்
அக்கூள் நயப்புகையிலே அதனால்
இக்கலியுகத்திலே இதற்கிணைய வேறில்லை.
என்று சொல்வார்களதனால் (நற்குண)

3. பக்குவமாக முகம்மது ராவுத்தர்
பாகப்படுத்திய பீடி
சர்க்கரை பாத்தியா வாலாஜாபள்ளியின்
தர்மகர்த்தரெனப் பாடி (நற்குண)

ஆலவாய் மதுராபுரிநகர் என்றவர்ணம்.
பாட்டு.

சீலமாம் கமால்பீடியின் பெருமை
செப்ப மாம்பழ வாடையே

செப்பமாம்பழ வாடையே—புகழ்
தேசமேவும் சிலேடையே (சீல)

(தொகையறு)

கோலாகலத்துடன் திருநெல்லையின் பஜார்
குலவி வருமோட்டாரதனில்
நாலாவிதத் தொழிலாளர்கள், வர்த்தகர்
நாடி வாங்கிடும் பீடி இதனில்

(பாட்டு)

சாலவும் ஜெயமே பெறக்கொடி
சாற்று முகம்மது இராவுத்தர்
சாற்று முகம்மது இராவுத்தர்—பள்ளி
போற்றிடும் தருமகர்த்தர் (சீல)

துலங்குசெம்பொன் - என்ற வர்ணம்.

1. நயந்துலங்கிடும் காஜிக்கமால் ஷேட்
நார்பீடியின் மகிமை
நானிலமெங்கும் கியாதியே
சொல்ல மென்மேலும்
ரஞ்சிதமான ஜோதியே (நயந்.

2. ராஜ சுகிர்த மணமும் குணமுந் திகழ்
(நார் பீடியின் மகிமை)

3. நத்திட லக்ஷண தத்துவ முற்றது
(நார் பீடியின் மகிமை)

4. லாவணியத்துடனே பலர் சுத்திய
(நார் பீடியின் மகிமை)

(சரணம்)

5. வியந்து பேசிட வேண்டிய காரம்
மிகுந்தது மக்கூள் புகையிலே சாரம்
மயந் தெளிவுற முகம்மது பெயர் தீரம்
வணிகரெனவே திருப்பணி அலங்காரம்
(நார் பீடியின் மகிமை)

அந்தாதிக் கும்மி.

1. சுந்தரமிஞ்சும் திருநெல்வேலிஜில்லா
சோதர, சோதரிமாரே, ஒரு
தந்திரமாகக் கமால்பீடிக்கு நகல்
தான்வந்ததைக்கேளும் நேரே.

2. இந்த நகரந்தனிற் புகழாக
எழுந்ததுமே கமால்பீடி—அது
முந்தவே வந்து விலையாகும் தன்மையை
மோசம்செய்ய மூவர்கூடி

3. கூடியிலங்கும் கமால்பீடி பூதலங்
கொண்டரிஜிஸ்டரைக் கண்டு—முழு
பேடித்தனம்செய்து மேலப்பாளையத்தில்
பெற்றபேர் மூவரே உண்டு

4. உண்டு முகம்மதுராவுத்தர் ஏஜண்டாய்
ஓங்கும் கமால்பீடிக்காக—உடன்
கொண்டுவிளங்கி மோட்டாரில் வர்த்தகஞ்செய்
கோதிலாவண்மை நேராக

5. நேராகக் கண்டுமனதில் பொறுமை
நினைத்த மூவர்கதை கேளும்—அதை
தாராளமாகவே சொல்லுகிறேனந்த
சங்கதியை எந்த நாளும்

6. நாளும் மேலப்பாளையந்தனில் வாழ்கின்ற
நட்பில்லா சுப்பையாசெட்டி—அவன்

பாழும் யோசனையில் மற்றும் இருவரை
பங்காகச் சேர்த்தானே குட்டி

7. குட்டித்தனமாகக் காமில் பீடிஎன்று
குயுக்தியான பேர்சூட்டி—ஒரு
கெட்டிக்காரரிடம் அச்சுப்படம் செய்து
கிஞ்சிற்றும் மாறுமல் காட்டி

8. காட்டிய காமில்பீடியைக் கடைகளில்
கண்டமட்டும் கொண்டுவைத்து—புகழ்
மேட்டிமையான கமால்பீடி கேட்டவர்
மெச்சிடக் காமிலேத் தாழ்த்து

9. தாழ்த்துத்தரக் காமில்பீடிகளை எல்லா
ஷாப்புகள் பூராவும் வைத்தார்—அங்கே
மாற்றிக்கொடுக்கக் கமால்பீடிக்குப்பதில்
வந்ததென்று ஷாப்பார் மதித்தார்.

10. மதித்துமிப்படி வஞ்சனைவர்த்தகம்
வக்கணைசெய் மூவர்தன்னை—உடன்
விதிப்படி தண்டனை சமர்ப்பித்திட
மேலாய் எழுந்தனர் முன்னே.

11. முன்னே எழுந்த முகம்மதுராவுத்தர்
முற்றுரிக்கார்டதைக் காட்டி—அதன்
பின்னேவந்திந்தக் காமில்பீடி செய்திட்ட
பேகதர் மூவரைக்கூட்டி

12. கூட்டித் திருநெல்வேலி ஜில்லாக்கோர்ட்டில்
கொடுத்தனர் டாமேஜு சூட்டு—அதை
தாட்டீயமாக்கச் சேரன்மாதேவி கோர்ட்டில்
தாக்கிவிசாரிக்கச் சாட்டு

13. சாட்டுப்படி சேரன்மாதேவி டிப்டியார்
சந்திரசேகரமேனன்—கேசின்
கூட்டுவர்த்தசத்தார் மூவர்கள் பேரிலும்
குற்றம் வாசித்திடலானன்.

14. ஆனதின்குற்றம் ஆபராதம் ரூபாய்கள்
ஆளொன்றுக்கு நூற்றம்பதுதான்—மதி
ஈனனும் சுப்பையாசெட்டியுடன் மூவர்க்
கேற்றது நானூற்றம்பதுதான்

15. தானுங்கெட்டுத் தன் பங்காளிகெட்டு
குற்றம் சாட்டப் பட்டுபின்னும்—மோதி
காணும் காமில்பீடி என்ற உருவத்தை
கண்டனே செய்தனர் நீதி.

16. நீதிப்படி சந்திரசேகரமேனன்
நேரில் கமால்பீடி ஜெயமாய்—பெற்ற
சேதிமுகம்மதுராவுத்தர் கேட்டுப்பின்
சிந்தைமகிழ்ந்தனர் நயமாய்.

எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும்- அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு. (குறள்)

176

மீரானியா பிரஸ், திருநெல்வேலி. 1-29.